# யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
## முதலாம் தவணைப் பரீட்சை - 2017
### கணிதம்

| சுட்டெண் :............................ | தரம் : 07 | நேரம் :-2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி – I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1) 56 இன் முதன்மைக்காரணிகளைக் காண்க.
2) 125 என்ற எண்ணினை 5 இனை அடியாகக்கொண்ட சுட்டிக் குறிப்பீட்டில் எழுதுக.
3) பெறுமானம் காண்க.
   i) $(-7) + (-17)$ ii) $(+4) + (-1.5)$
4) 40 இன் காரணிகளைக் காண்க.
5) குமுதாவின் பிறந்தநாள் 2005-03-17 எனின் 2017-01-05 இல் குமுதாவின் வயதை வருடங்கள், மாதங்கள், நாட்களில் காண்க.
6) $x = 4$ ஆகும் போது $2x^2$ இன் பெறுமானம் காண்க.
7) 45 , 108 என்னும் இரு எண்களின் பொதுக்காரணிகளுட் பெரியதைக் காண்க.
8) தரப்பட்ட கோணத்தின் உச்சி , புயங்களை பெயரிடுக.




9) 915 என்னும் எண்ணை முதன்மைக் காரணிகளின் பெருக்கமாக எழுதுக.
10) கி.பி 1689 ஆம் ஆண்டு எத்தனையாம் சகாப்தம்
11) நாற்பக்கல் ஒன்றிற்கு இருக்கக்கூடிய அதிகூடிய சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கை யாது?
12) 3 வருடங்களில் எத்தனை நாட்கள் உள்ளன.
13) 97853 ☐ என்ற ஆறு இலக்க எண் நான்கினால் வகுபடும் எனின் ஒன்றாமிடத்துக்கு பொருத்தமான இரு இலக்கங்களை காண்க.
14) சுருக்குக.
    i) $75 \div (8 + 7) =$ ii) $4 + 12 \times 3 =$
15) $K = \{3, 5, 7, 9\}$ தொடை k இன் மூலகங்களை தெளிவாக அறியக்கூடிய பொதுப்பண்பொன்றின் மூலம் எழுதுக.
16) எண்ணொன்றின் இலக்கச்சுட்டி 9 ஆக இருப்பின் அவ் எண்ணை வகுக்கக்கூடிய இலக்கங்கள் இரண்டு தருக.
17) இரு முதன்மை எண்களுக்கு இருக்கக்கூடிய பொ.கா.பெ யாது?
18) சமாந்தரக்கோடு வரைவதற்கு பயன்படும் இரு கணித உபகரணப் பொருட்கள் தருக?
19) 5 ஆவது மாடியில் உள்ள ஒருவர் 3 மாடிகள் கீழே இறங்கி வருவாராயின் அவர் தற்போது எத்தனையாவது மாடியில் இருக்கின்றார்?
20) இரு சமாந்தர நேர்கோடுகளுக்கிடையேயான மிகக் குறுகிய தூரம் எவ்வாறு அழைக்கப்படும்?



kalvi.lk

## பகுதி – II

❖ முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. a) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு தொடையினது மூலகங்களையும் இரட்டை அடைப்பினுள் எழுதுக.

i) A = { 30 நாட்கள் கொண்ட மாதங்கள்}

ii) B = { KOKUVIL HINDU COLLEGE }

b) கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் " √ " எனவும் பிழையாயின் " X " எனவும் அடையாளம் இடுக.

i) 2010 ஆம் ஆண்டு ஓர் நெட்டாண்டு ஆகும் ( )

ii) எல்லா வகை முக்கோணிகளினதும் சமச்சீர் அச்சுக்கள் 3 ஆகும் ( )

iii) 673 472 என்ற எண் நான்கினால் மீதியின்றி வகுபடும் ( )

iv) சதுரம், செவ்வகம் ஆகிய அடர்களின் சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கைகளுக்கு இடையிலான வித்தியாசம் 2 ஆகும் ( )

c) சுருக்குக.

i) $10+5\times 6\div(2+1)=$

ii) $50-20\div(2+3)=$

2. நிமலின் பிறந்தநாள் 2001 – 09 – 19

கமலின் பிறந்தநாள் 2003 – 10 – 15

i) நிமல் , கமல் ஆகிய இருவரது வயதுகளுக்கும் இடையிலான வித்தியாசத்தினை வருடம், மாதம், நாட்களில் காண்க.

ii) 2017 – 01 – 01 அன்று நிமல், கமல் ஆகிய இருவரதும் வயதினை வருடம், மாதம், நாட்களில் காண்க.

iii) பிறந்து 100 வருடங்கள் ஆவதற்கு 1நாள் முன்னர் இறந்த யானை ஒன்றின் வயதை

a) வருடம், மாதம், நாட்களில் காண்க.

b) நாட்களில் மாத்திரம் காண்க.

3. a) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கோவையையும் சுட்டிக் குறியீட்டில் எழுதுக.

i) $a\times a\times b\times b\times a\times a=$

ii) $x\times x\times x\times x\times y=$

iii) $p\times p\times p\times q\times q\times q=$

iv) $m\times m\times m\times m\times m\times m=$

v) $l\times l\times m\times m\times l\times m=$

b) $x=3$ , $y=6$ எனப்பிரதியிட்டு கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கோவையினதும் பெறுமானம் காண்க.

i) $3x^3y^2=$

ii) $6x^2y^3=$

iii) $7x^3y^3=$




kalvi.lk

4. a) 8cm நீளமுள்ள நேர்கோட்டுத்துண்டம் AB ஐ வரைக.
b) AB இற்கு மேலே 3cm செங்குத்துத் தூரத்தில் புள்ளி m ஐக் குறிக்க.
c) புள்ளி m இனூடாக AB இற்குச் சமாந்தரக்கோடு CD இனை வரைக.
d) AB இற்கு கீழே 4cm செங்குத்துத் தூரத்தில் புள்ளி n ஐக் குறிக்க.
e) புள்ளி n இனூடாக AB இற்குச் சமாந்தரக்கோடு PQ இனை வரைக.

5. a) பின்வரும் எண்களின் பொ.கா.பெ காண்க.
i) 72 , 96 ii) 35 , 60
iii) 82 , 56 iv) 112 , 256
b) யாழ் பேருந்து நிலையத்திலிருந்து தெல்லிப்பளை, காரைநகர் செல்லும் பஸ்வண்டிகள் முறையே 30 நிமிடங்கள், 45 நிமிடங்களுக்கு ஒரு தடவை பயணிக்கின்றன. காலை 6.30 மணிக்கு இரு பஸ்வண்டிகளும் ஒருமித்து புறப்பட்டால் , அவை மீண்டும் எத்தனை மணிக்கு ஒருமித்து புறப்படும்.

6. a) உருவில் தரப்பட்டுள்ள கோணங்கள் எவ்வகைக் கோணங்கள் என எழுதுக.




ABC = LMN = XYZ =

b) பாகை மானியைப்பயன்படுத்தி பின்வரும் கோணங்களை வரைந்து பெயரிடுக.
i) PQR = 75° ii) ROP = 105°
ii) ABC = 200° iv) STU = 270°


kalvi.lk

kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

Whatsapp 075 287 1457